# இலங்கையில் ஜனநாயகத்திற்கு ஆப்பு வைத்து இராணுவம் அரசை கைப்பற்றலாம் - அவதானிகள் அச்சம்

(கொழும்பு)

இலங்கை உள்நாட்டுப் போரில் ஜனாதிபதி பிரேமதாசா இராணுவத்திற்கு அதிகளவு முக்கியத்துவம் அளித்து வருவதால் இராணுவம் தன்னிச்சை போல் நடந்து ஜனநாயகத்திற்கு ஆப்பு வைத்து அர

(4ம் பக்கம் பார்க்க)


விலை ரூபா 5.00

ஈழநாடு

THE EELANADU

NATIONAL TAMIL DAILY

மலர் 34 திருவள்ளுவர் ஆண்டு 2023 பங்குனி 21 இதழ் 53

யாழ்ப்பாணம் வெள்ளிக்கிழமை 03 — 04 — 1992


## க. பொ. த. [சா] பரீட்சை முடிவுகள் இன்று வெளியாகும்

(கொழும்பு)

1991-ம் ஆண்டு டிசம்பர் மாதம் நடைபெற்ற க. பொ. த. (சாதாரண) பரீட்சை முடிவுகள் இன்று வெளியாகவுள்ளது.

சிலவேளை மின்வெட்டு காரணமாக முடிவுகள் வெளியாவதில் சில தாமதங்கள் ஏற்படலாம் எனவும் பரீட்சை ஆணையாளர் ஆர்தர் வெதமுல்ல நேற்று தெரிவித்தார். (கே)

## பாரிய ராணுவ நடவடிக்கை புலிகளால் முறியடிப்பு

(திருகோணமலை)

திருகோணமலை மாவட்டத்தில் இவ்வருடம் மேற்கொள்ளப்பட்ட மூன்றாவது பாரிய இராணுவ நடவடிக்கை புலிகளால் முறியடிக்கப்பட்டது.

கடந்த மாதம் 24-ம் திகதி கும்புறுப்பிட்டி, வெருகல் முருகன் கோயில் இராணுவ

(2ம் பக்கம் பார்க்க)

# சகல அழிவுகளையும் நிறுத்த இனப்பிரச்னையை தீர்க்குமாறு உலகவங்கிமீண்டும்வற்புறுத்து

(நியூயோர்க்)

**இலங்கையில் நடைபெறும் சிவில் யுத்தத்திற்கு சமாதானத்தைக் காண இலங்கை அரசு தன்னாலான முயற்சியில் இறங்கவேண்டும் என உலகவங்கி தனது அறிக்கையில் தெளிவுபடுத்தியுள்ளது.**

சமாதானம் ஏற்படாததால் அரும் உயிர்கள் பலியாவதும், இராணுவச்செலவு அதிகரிப்பதும், உற்பத்தி வீழ்ச்சியும், முதலிடுவோர் முதலீட்டில் நம்பிக்கையற்ற நிலையும் ஏற்பட ஏதுவாகிறது.

சிவில் யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவருவதில் அரசுக்கு இருக்கும் அரசியல் சிக்கலை நாம் உணர்ந்தபோதும் சமாதானம் எய்தாவிட்டால் சிறிலங்கா அரசு என்னதான் பொருளாதார மாற்றத்தை கொண்டுவந்தாலும் கைத்தொழில் அபிவிருத்தி தாமதமாகும் என்பது திண்ணம் எனவும் தனது இலங்கையின் பொருளாதாரம் பற்றிய அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது. (கே)

## கைக்குண்டு வெடித்து இரு பொலிஸார் பலி

[வாழைச்சேனை]

வாழைச்சேனை பொலிஸ் நிலையத்தில் கைக்குண்டு வெடித்து இரு பொலிஸார் உயிரிழந்தனர். 12 பேர் காயமடைந்தனர்.

வாழைச்சேனை பொலிஸ் நிலையத்தில் நேற்று முன்தினம் அதிகாலை பொலிஸார் அணிவகுத்து நின்றபோது கைக்குண்டு ஒன்று வெடித்

4-ம் பக்கம் பார்க்க)

## கண்ணி வெடிக்கு அஞ்சி விமான மூலமே தாக்குதல்

(கொழும்பு)

விடுதலைப்புலிகளின் கண்ணி வெடிக்கு அஞ்சி விமானங்களிலிருந்து கடந்த மூன்று நாட்களாக மணலாறு பகுதியில் படையினர் பீரங்கித் தாக்குதல்கள் நடத்தி வருவதாக கூட்டுப்படைத் தலைமையக அதிகாரி கேர்ணல் சரத்முனசிங்கா தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற பத்திரிகையாளர் மகாநாட்டில் அவர் இவ்வாறு

(2 ம் பக்கம் பார்க்க)

## கிழக்கில் இரு தாக்குதல் பல படையினர் பலி

[மட்டுநகர்]

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள காத்தான்குடி, சித்தாண்டி பகுதிகளில் விடுதலைப் புலிகள் நடத்திய இருவேறு தாக்குதல்களில் பல படையினர் உயிரிழந்துள்ளனர்.

நேற்று முன்தினம் காத்தான்குடியில் ரோந்து வந்த படையினர்மீது புலிகள் நடத்திய திடீர் தாக்குதலில் பலர் கொல்லப்பட்டனர்.

வந்தாறு மூலையிலிருந்து மொறக்கொட்டாஞ்சேனை நோக்கி ஜீப்பில் சென்று

(4ம் பக்கம் பார்க்க)

## க.பொ. த. விஷேட பரீட்சை பொருளியல்வினாவில்பிழை

(யாழ்ப்பாணம்)

வடமாகாணத்தில் நேற்று முன்தினம் ஆரம்பமான க. பொ. த. உயர்தர விஷேட பரீட்சையின் முதல்நாள் பாடமான பொருளியல் வினாத்தாளில் பிழையிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

பொருளியல்-I வினாத்தாளில்

[4ம் பக்கம் பார்க்க]

## 1,500 கோடி ரூபாவிற்கு அரசு ஆயுதக் கொள்முதல்

[கொழும்பு]

1983 முதல் 1991 வரையிலான காலப்பகுதியில் இலங்கை அரசு வெளிநாடுகளிலிருந்து 1,500 கோடி ரூபாவிற்கும் மேல் இராணுவ தளபாடங்களை கொள்வனவு செய்துள்ளது.

1983 முதல் 1987 வரையிலான காலப்பகுதியில் அரசு சுமார் 500 கோடி ரூபாவிற்கு இராணுவ தளபாடங்களை கொள்முதல் செய்துள்ளது. இதில்பெரும் பகுதி சீனாவிடமிருந்தே பெறப்பட்டுள்ளது.

மிக அண்மையில் அரசு 150 மி. மீ· ரக பீரங்கிகள் 12ம்,

(4ம் பக்கம் பார்க்க

## வடக்கில் படை நடவடிக்கை தொடருமென இராணுவம் தகவல்

(கொழும்பு)

வடபகுதியில் இராணுவ நடவடிக்கை நிறுத்தப்படமாட்டாது. இது தொடர்ந்தும் இடம்பெறுமென சிரேஷ்ட இராணுவ அதிகாரி ஒருவர் கூறியுள்ளார்.

அவர்மேலும் கூறுகையில்: விடுதலைப் புலிகளுக்கு எதிராக தற்போது முல்லைத்தீவுப் பகுதியில் மேற்கொள்ளப்பட்டு வரும் 'சிக்ஸர்' ராணுவ நடவடிக்கையில் இன்னும் ஒரு சில தினங்களில் மாற்றம் ஏற்படும்.

இந்த விபரம் குறித்து மேலும் ஏதும் கூற அவர் மறுத்து விட்டார்.

வடபகுதியில் ராணுவ நடவடிக்கை நிறுத்தப்படுமா என்று அவரிடம் கேட்டபோது தொடருமென பதிலளித்தார்

## படையினருக்கு சிகிச்சை அளிக்க விசேட ஏற்பாடு

(கொழும்பு)

வடக்கு-கிழக்கு பகுதிகளில் நடைபெறும் சண்டையில் காயமடையும் படையினர் தொகை அதிகரித்து வருவதால் அவர்களுக்கு துரித சிகிச்சை அளிப்பதற்கு விசேட ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக சுகாதார மகளிர் விவகார அமைச்சர் ரேணுகா ஹேரத் தெரிவித்துள்ளார்.

தென்பகுதியில் இடம்பெற்ற பொது வைபவம் ஒன்றில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

வடக்கு-கிழக்குப் பகுதி

(4-ம் பக்கம் பார்க்க)

## 1லட்சம் தேங்காய் உடைத்து அரசுக்கு எதிராக வழிபாடு

[கொழும்பு]

ஸ்ரீலங்கா ஜனாதிபதி பிரேமதாசாவின் அரசு இறை அருளால் பதவியிழக்க வேண்டி கதிர்காமம் ஆலயத்தில் ஒரு லட்சம் தேங்காய்கள் உடைத்து நேற்று வழிபாடு நடத்தப்பட்டது!

அரசுக்கு ஆதரவான படைகளினால் படுகொலை செய்யப்பட்ட ஆயிரக்கணக்கான சிங்களவர்களின் உறவினர்களும் சகோதர-சகோதரிகளினாலுமே இந்த வழிபாடு நடத்தப்பட்டது.

[4-ம் பக்கம் பார்க்க]

# வரி விளம்பரம்

**தவறிவிட்டது**

Honda C 90 102 சிறீ 1036 என்னும் இலக்கமுடைய அடி உறுதிப்புத்தகம் புத்தூர் சந்திக்கும் (விரைவாணி) மட்டுவிலுக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கோப்பாய் காவல்துறை பொறுப்பதிகாரியிடம் ஒப்படைக்கவும். (சி-6118)

**ஜோஸ்யரின் ராசிபலன்**

நாடறிந்த சோதிடர் ஜோஸ்யரின் கணிப்பில் ஆங்கிரசவருஷம் பிறக்கும் சுப நேரம் கைவியளம் வழங்குதல், பன்னிரண்டு இராசிகளுக்கும் வரவு செலவு, பொதுப்பலன்கள் ''ஜோஸ்யரின் ராசிபலன்'' என்று கேளுங்கள். கங்கா றேடேர்ஸ் தின்னவேலி, பிக்பென்ஸ் (B), கிளிநொச்சி. (சி-6116)

**PITAWAKKA PLUS**

மதுபானத்தில் ஏற்படும் ஈரல் வியாதிகளுக்கும் வேறு மருந்துகளால் உடலில் ஏற்படும் நச்சுத் தன்மைகளுக்குமாக 9 வகைமூலிகை அடங்கியது. கிடைக்குமிடம் எஸ். ரி, மெடிக்கல்ஸ், ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (சி-6098)

**தவறிவிட்டது**

முக்கியமான கையேட்டுப் பதிவுப் புத்தகம் 30-ந் திகதி காலை சிவலிங்கப்புளியடிக்கும் ஐந்து சந்திக்குமிடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் ஸ்பெசல் இஞ்சினியரிங் வேர்க்ஸ், முட்டாசுக் கடைச்சந்தி, யாழ்ப்பாணத்தில் அல்லது 21, ஒட்டுமடம் வீதி, ஒட்டுமடம் என்ற விலாசத்தில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (சி-6111)

கடத்தல்

## பொருட்களில் மாற்றங்கள்

(கொழும்பு)

கடத்தல் முறையும், கடத்தல் நடைபெறும் இடங்களும் கடத்தப்படும் பொருட்களும் கடந்த சில வருடங்களில் பல மாற்றங்களுக்கு உள்ளாகியுள்ளன என சுங்கப்பகுதிபொறுப்பாளர் லலித்கிங்கம தெரிவித்துள்ளார்.

இதற்கு வடக்கில் நடைபெற்றுவரும் யுத்தநிலைமையே காரணமெனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (கே)

அன்னை பூபதி நினைவாக

## நாளை உண்ணாவிரதம்

[யாழ்ப்பாணம்]

அன்னை பூபதி நினைவு தினத்தையொட்டி யாழ்ப்பாண பலநோக்குக் கூட்டுறவுச்சங்க ஊழியர் ஒருநாள் அடையாள உண்ணாவிரதத்தை நாளை சனிக்கிழமை, கைலாசபிள்ளையார் கோவில் முன்றலில் நடாத்தவுள்ளார்கள்.

அன்றைய தினம் யாழ். ப. நோ. கூ. சங்க கிளைகள் அனைத்தும் மூடப்பட்டிருக்கும் என சங்கத் தலைவர் சூ. சிறில் தெரிவித்தார். [வீ]

## குருபூசை

(யாழ்ப்பாணம்)

எதிர்வரும் சனிக்கிழமை காலை 8 மணி தொடக்கம் நல்லூர் செல்லப்பா சுவாமிகளின் 77ம் ஆண்டு குருபூசை நல்லூரிலுள்ள சுவாமிகளின் நினைவாலயத்தில் கொண்டாடப்படும்.

நண்பகல் சடையம்மா மடத்தில் மகேஸ்வர பூசையும் நடைபெறும்,

**கண்ணி வெடிக்கு**

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கூறினார்.

அவா மேலும் தெரிவிக்கையில்,

மணலாறு பகுதியில் தொடர்ந்து நடைபெற்றுவரும் 'ஓபரேசன்' ஹயபார' நடவடிக்கையில் புலிகளின் முக்கிய தளமான புனிதபூமி என்னும் இடத்தை நோக்கி முன்னேறிக்கொண்டிருக்கும் படையினர் தளத்திற்குள்ளே செல்வதற்கு விடுதலைப்புலிகளினால் புதைத்து வைக்கப்பட்டிருக்கும் நிலக்கண்ணி வெடிகளினால் அச்சமடைந்துள்ளனர், இதனால் தரை மார்க்கமாக நகரமுடியாத படையினருக்கு ஆதரவாக கடந்த மூன்று நாட்களாக இப்பகுதியில் விமானங்களிலிருந்து அதிகமான பீரங்கிக் குண்டுத் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன என்றார். (ரி)

**பாரிய ராணுவ**

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

முகாம்களிலிருந்து பாரிய ஆயுதங்கள் சகிதம் முன்னேறி வந்த படையினரைப் புலிகள் இடைவழியில் வைத்துத் தாக்கிப் பெரும் இழப்புகளுடன் பின்வாங்கச் செய்தனர்.

வெருகல் முருகன் கோயில் இராணுவ முகாமிலிருந்து வெளியே வந்த இராணுவத்தினரை காடுகளின் எல்லைப் பகுதியில் வழிமறித்து புலிகள் கடுமையான தாக்குதலைநடத்தினர். ஆறு நாட்களாக நடைபெற்ற இச் சண்டையி இராணுவ தரப்பில் பலத்த சேதமேற்பட்டது.

கடந்தசனி, ஞாயிறு ஆகிய நாட்களில் இப்பகுதியில் புலிகள் வைத்த ஏழு கண்ணி வெடிகளில் சிக்கிய இராணுவத்தினர் பலர் உயிரிழந்ததைத் தொடர்ந்து படையினர் பின்வாங்கிச் சென்றனர்.

இதேவேளை கும்புறுப்பிட்டி முகாமிலிருந்து வெளியேவந்த படையினர் புலிகளின் தீரமிகு தாக்குதலினால் அங்கோடை என்னுமிடத்தில் தரித்து நிற்கிறார்கள். (ரி)

## பரிசளிப்புவிழா

[யாழ்ப்பாணம்]

தமிழீழ ஆய்வு நிறுவனத்தினால் நடத்தப்பட்ட வதிவிட வேளாண்மைப் போட்டியில் வெற்றிபெற்றோருக்கான புத்தூர் பிரதேச மட்ட பரிசளிப்பு விழா ஆவரங்கால் சிவன் கோவில் வீதியில் 5ம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 6 மணிக்கு நடைபெறவுள்ளது.

## நேர்முகப் பரீட்சை

(கொழும்புத்துறை)

கொழும்பு மதுவரித் திணைக்களத்தினால் திணைக்களத்தைச் சேர்ந்த சகல மாவட்டங்களிலும் உள்ள மதுவரிப் பரிசோதகர்களுக்கான திணைக்களத்தின் அரையாண்டு எழுத்துப் பரீட்சை மதுவரித் தலைமைத் திணைக்கத்தில் நாளை 4ம் திகதி சனிக்கிழமை காலை 9-00 மணி தொடக்கம் மாலை 4-00 மணி வரை நடைபெற உள்ளது,

நேர்முகப்பரீட்சை 6ம் திகதி திங்கட்கிழமை காலை 10-00 மணிக்கு திணைக்களத்தில் நடைபெறும் என மதுவரி ஆணையாளர் தெரிவித்துள்ளார். ]154]

உ

## தொண்டைமானாறு அருள்மிகு செல்வச்சந்நிதி ஆலய கும்பாபிஷேக தின சகஸ்ர சங்காபிஷேகம்

பிரசோற்பதி வருடம் பங்குனி மாதம் 22-ம் திகதி (04-04-1992) சனிக்கிழமை காலை 10 மணியளவில் சங்காபிஷேகமும் நண்பகல் 12 மணியளவில் முருகப் பெருமான் வீதி உலாவும் நடைபெறும். இதன் சார்பாக அடியார் மடத்தில் அன்னதானமும் நடைபெறும்.

அனைவரும் வருக! அவன் அருள் பெறுக!

முருகேசு சுவாமிகள்,
அடியார் மடம்,
தொண்டைமானாறு.

(சி-6114)

அளவெட்டி மல்லாகம்
ப. நோ. கூ. சங்கம் (வரைவுள்ளது)

## பதவி வெற்றிடம்
### அங்கத்தவர் உறவு
### பயிற்சி உத்தியோகத்தர் 201/10

சங்கத்தில் வெற்றிடமாகவுள்ள மேற்படி பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள் யாவும் சங்கத்தால் வழங்கப்படும் விண்ணப்பப் படிவங்களில் பூர்த்தி செய்து எதிர்வரும் 18-04-92க்கு முன்னர் சேரக்கூடியதாக, நேரடியாகவோ அல்லது பதிவுத் தபால் மூலமோ அனுப்பிவைக்க வேண்டும்.

**பதவி:** அங்கத்தவர் உறவுப் பயிற்சி உத்தியோகத்தர் 201/10

**தகைமை:** அங்கத்தவர் உறவப் பயிற்சி உத்தியோகத்தர் 11-வது சம்பள அளவுத் திட்டத்தில் 2 வருட அனுபவம் அல்லது கூட்டுறவுப் பணியாளர் 12-வது சம்பள அளவுத் திட்டத்தில் 4 வருட அனுபவம்.

அல்லது

கூட்டுறவு தராதரப் பத்திரம் (உயர்தரம்) /

அல்லது

க. பொ. த. (உயர்தரம்) 3 பாடம் சித்தி.

**சம்பளம்:** 350 — 15 X 7 — 20 X6 — 615 (வாழ்க்கைச் செலவுப் படிகளும்)

**வயது:** விண்ணப்ப முடிவு திகதியில் 21 வயதுக்கு குறையாதவராயும் 40 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

விண்ணப்பப் பத்திரங்களுடன் கல்விச் சான்றிதழ், பிறப்பு சான்றிதழ் என்பனவற்றின் பிரதிகள் இணைத்து அனுப்பப்படல் வேண்டும்.

பொது முகாமையாளர்,
அளவெட்டி மல்லாகம்
பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்,
அளவெட்டி.

(ஏ-2052)

சங்கானை பிரதேசச் செயலகம்
(உ. அ. அ. பணிமனை)
நடாத்தும்

## தமிழ் புத்தாண்டு விழா - 1992

| விளையாட்டுப் போட்டி | இலக்கியப் போட்டி |
|---|---|
| கரபந்தாட்டம் (ஆண்கள்) | கவிதை |
| எல்லே (ஆண்கள்) | கட்டுரை |
| கயிறு இழுத்தல் (ஆண்கள்) | சிறுகதை |
| கிளித்தட்டு (ஆண்கள்) | நாட்டுப்பாடல் |
| மென்பந்து கிரிக்கட் (ஆண்கள்) | (தனி, குழு) |
| வலைபந்தாட்டம் (பெண்கள்) | |

விளையாட்டுப்போட்டிகளுக்கான விண்ணப்ப முடிவு திகதி: 09-04-1992

இலக்கியப் போட்டிகளுக்கான விண்ணப்ப முடிவு திகதி: 15-04-1992

மேலதிக விபரங்களை சங்கானை உ. அ. அ, பணிமனையில் பெற்றுக் கொள்ளலாம்.

செல்வி ரூபினி கனகரத்தினம்,
பிரதேசச் செயலர் [உ. அ. அ.].

பிரதேசச் செயலகம் [உ. அ. அ. பணிமனை],
சங்கானை.
02-04-1992.

(எ 2053)

## 31-ம் நாள் நினைவஞ்சலி

(01-04-92)



## அமரர் கைலாசபிள்ளை கந்தசாமி

**கந்தசாமிப் பெரியோன் பெரும் பாதங்கள் போற்றி**

அந்தமில் புகழும் அறிவும் உடையான்
செந்தமிழ் தேர்ச்சியும் செழுமையும் உடையான்
கந்தசாமிப் பெயரோன் பெரும் பெயர் ஆசான்
சொந்தமாக மத்தியகல்லூரிப் பழைய மாணவன்
வாழ் நலம் புகழ் ஆள் வினை அதனை
ஏழ்தலம் புகழ் எழிலுடைப் பணியினில்
ஏற்றம் பெற்று எழிலுடன் திகழ்ந்து
மாற்ற மின்றி ஆசானாகி உபஅதிபருமாகி
ஊக்கங் கொண்ட உன்னத வாழ்வில்
ஆக்கம் பலவும் ஆற்றினன் பணிகளாய்
கண்ணை இமை காப்பது போல் கல்லூரி போற்றி
எண்ணற்ற புகழீந்து ஏற்றமது பெறவே
தன்னுயிர்ச் சேவை தனை உவந்தளித்த ஆசான்
பெரும் புகழினை மறக்கலுமாமோ இன்று
வஞ்சனைகளறியாத வார்த்தைதனைக் காணோம்
நெஞ்சங்கள் நெகிழவைக்கும் அறிவுரைகள் காணோம்
பஞ்சணையும் பள்ளிகளும் பாலரையுமே விட்டு
விஞ்சயரைத் தொடர்ந்தேனோ விரைந்துவந்து கூறீர்.

கெஞ்சி நாம் கேட்கின்றோம் கேள்விகளை இங்கே
தஞ்ச மெனப் பதிலொன்றுந் தரமாட்டீர் இன்று
அஞ்சு கின்றோம் அழுகின்றோம் நும்பிரிவாலிங்கே
எஞ்சி நிற்கும் எமக்கீந்த பணிகளையே எண்ணி

கந்தசாமிப் பெரியோன் பெரும் பதங்கள் போற்றி
வந்தனைகள் தருகின்றோம் வழிந்தோடுங் கண்ணீரால்
சிந்தனைகள் அற்ற உள்ளம் தேறுதலுமின்றி
உந்தனையே நினைந்து நெஞ்சம் உருகிறோமையா.

ஆசிரிய வட்டம்
யாழ். மத்திய கல்லூரி.

(சி-6119)

யாழ்ப்பாணம்



# “தரிசு நிலங்களாக உள்ள வல்லை, கல்லுண்டாய், மண்கும்பான் வெளியில் சிறிய காடுகளை ஏற்படுத்த வேண்டும்”

**— புவியியற்துறைத் தலைவர்**

(யாழ்ப்பாணம்)

‘யாழ் மாவட்டத்தில் தரிசு நிலங்களாக உள்ள வல்லை வெளி, மண்கும்பான் வெளி, பொம்மைவெளி, கல்லுண்டாய் வெளி போன்ற இடங்களில் சிறிய அளவிலான காடுகளை ஏற்படுத்தவேண்டும்’.

இவ்வாறு யாழ். மாவட்டத்தில் அண்மையில் ஏற்படுத்தப்பட்டுள்ள நிலப்பயன்பாட்டுக் குழுவின் தலைவரும், யாழ். பல்கலைக்கழக புவியியற்துறைத் தலைவருமான திரு. செ. பாலச்சந்திரன் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது: இரண்டு வருடங்களாக யாழ். மாவட்டத்தில்மண்ணெண்ணை போன்ற எரிபொருட்களின் மீது தடை ஏற்படுத்தியமையால் சில நன்மைகளையும் பெற்றுள்ளோம். நிலத்தில் உள்ள நீர்வளம் சேமிக்கப்பட்டிருக்கின்றது.

வரட்சிப் பிரதேசங்களில் எண்ணைப் பயிர்கள் செய்வதினால் பல பயன்களைப் பெற முடியும். இப் பயிர்களுக்கு அதிகளவு தண்ணீர் தேவையில்லை. இது இந்தக் குழுவின் முக்கிய நோக்கமாக உள்ளது.

நெல் பயிரிடப்படாத நிலங்களை வெற்று நிலங்களாக விடாது, அந்த நிலங்களில் சிறு தானியங்களை சுழற்சி முறையில் செய்யுமாறு சம்பந்தப்பட்டவர்களைக் கேட்க இருக்கிறோம்.

இந்தக் குழுவின் முக்கிய நோக்கம் திருநெல்வேலியில் இருந்து காங்கேசன்துறை வரை வேளாண்மை செய்யக் கூடிய நல்ல நிலம் இருக்கிறது. இந்த நிலங்கள் இப்போது வீடுகள் கட்டுப்பட்டு வருகின்றன. இயலக்கூடிய அளவில் இந் நிலங்களில் வீடு கட்டாது, இதற்காகத் தேர்ந்தெடுக்கப்பட்ட நிலங்களில் வீடுகளைக் கட்டினால், இப் பிரதேசங்களை விவசாய நிலங்களாக மாற்றலாம் எனக் கருதுகிறோம்.

இப்பொழுது யாழ்ப்பாணக் குடா நாட்டில் நிலப்பயன்பாடு 1960ல் ஆரம்பிக்கப்பட்ட பழைய திட்டத்துக்கு அமைய இருக்கிறது.

இதன் பிரகாரம் பயிர்ச் செய்கை விளைகின்ற பயிர்கள பரப்பு, பிரதேசத்தின் குறிச்சி சரியான தகவல் இல்லை.

இப்பொழுது இலங்கையில் செய்மதிப்படங்கள் மூலமும், தொலைநோக்கு முறையிலும் நிலப்பயன்பாட்டுமுறை நில அளவீட்டுத் திணைக்களத்தினால் வெளியிடப்பட்டுள்ளது. இதில் யாழ். மாவட்டத்துக்கான நிலப் பயன்பாடு முறையும் உள்ளது.

இதை அடிப்படையாகக் கொண்டு யாழ். மாவட்டத்தில் உள்ள 465 கிராமசேவகர் பிரிவுகளில் நகர நிலம்-கட்டிடம் கொண்டது எஞ்சிய நிலம் என்றும், பயிர்செய் நிலம் வீட்டுத் தோட்டம், மரவகை (தென்னை). வருஷப் பயிர் (பலவகை மரம்), பயிர் நிலம் (நெல்), ஐதான பயிர் நிலம் என்றும்; காட்டுநிலத்தில் இயற்கைக்காடு அடர்த்தி அடர்த்தியற்ற காடு, காட்டாக்கம் என்றும்; புல்நிலத்தில் முட்புதர் நிலம் புல்நிலம் என்றும்; ஈரநிலத்தில் காடுள்ளது, காடற்ற சதுப்புநிலம், நீர்ப்பகுதி, தரிசுநிலம் என்று 1988—89 தொலைவு நுகர்வு நிலப் பயன்பாட்டுப் படங்கள் மூலம் பல புதிய நிலப் பயன்பாட்டு முறையை பயன்படுத்துமாறு நிறுவனங்களையும், பொதுமக்களையும் கேட்கவுள்ளோம். [சு]

---

★ 500 கிராம்

# ஹெரோயின் கடத்த முயன்ற இந்தியப் பிரஜை கைது

(கொழும்பு)

பொலிஸ் போதைப் பொருள் தடுப்புப் பிரிவினர் கடந்தபுதன்கிழமை 500கிராம் நிறையுள்ள ஹெரோயினை நாட்டிற்குள் கடத்திவர முற்பட்ட இந்தியப் பிரஜை ஒருவரை கைது செய்தனர்.

சென்னையிலிருந்து இலங்கை வந்தஇந்த இந்தியப்பிரஜை 5 லட்சம் ரூபாவுக்கும் அதிகம் பெறுமதிவாய்ந்த ஹெரோயினை நாட்டிற்குள் கடத்துவதற்குமுயற்சித்தார்.

இந்த ஹெரோயின் உணவு அரைக்கும் யந்திரம் ஒன்றுக்குள் மறைத்து வைக்கப்பட்டிருந்ததாகதெரிவிக்கப்பட்டது.

கொழும்பு விமான நிலையத்தில் கடந்தசனிக்கிழமைமுதல் ஹெரோயினைக் கொண்டு வந்ததற்காக கைது செய்யப்பட்ட இரண்டாவது இந்தியப் பிரஜை இவராவர்.

சந்தேக நபர் தொடர்ந்தும் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டிருக்கிறார்.

---

# “போபஸ் பீரங்கி பேரம் உண்மையை வெளிக்கொணர அரசு கடமைப்பட்டுள்ளது! - பிரதமர்

(புதுடில்லி)

போபஸ்பீரங்கிபேரபிரச்னையில் உண்மையை வெளிக்கொணர அரசு கடமைப்பட்டிருக்கிறது என்றும், இது குறித்து தீவிரவிசாரணை நடத்தப்படவேண்டும் என்றும் சுவிஸ் அதிகாரிகளிடம் தெளிவாகத் தெரிவிக்கப்பட்டிருப்பதாகபிரதமமந்திரி பி. வி. நரசிம்மராவ் நேற்று முன்தினம் நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

முன்னாள்வெளியுறவுஅமைச்சர் மாதவ்சிங் சோலங்கி அனுப்பிவைத்த கடிதத்தைப் புறக்கணிக்குமாறு தான்சுவிஸ் அதிகாரிகட்கு அறிவுறுத்த இருப்பதாகவும் அவர் கூறினார்.

உறுப்பினர்களின் கோரிக்கைப்படி உண்மையான விபரம் தெரிவிக்கப்படும் எனவும் அவர் உறுதியளித்தார்.

இதேவேளை ஊழல் வழக்கு தொடர்பான வங்கி ஆவணங்களை கோரும் இந்தியாவின் கோரிக்கை இன்று ஜெனீவா நீதிமன்றத்தில் விசாரிக்கப்படவுள்ளது. (கே)

---

# இராசிபலன்

**3/04/1992**

**வெள்ளிக்கிழமை**

**(தமிழுக்கு பங்குனி 21)**

அமாவாசை மு. ப. 11-09 வரை; ரேவதி வைகறை 5-45 வரை. அமிர்தயோகம். இராகுகாலம் காலை 10-40 முதல் 12-20 வரை; சுபநேரம் காலை 6-10 முதல் 7-40 வரை.

மேடம்: கௌரவ பாதிப்பு, நீசர் நட்பு, அலைச்சல்.

இடபம்: இனிய வார்த்தை. உறவினர் வருகை, மதிப்பு.

மிதுனம்: கூட்டு முயற்சி, பண லாபம், தொழில் மேன்மை.

கடகம்: சுபவிரயம், உடல் சிரமம், அவமதிப்பு.

சிங்கம்: பொருள் இழப்பு, காரிய தாமதம், யோசனை.

கன்னி: கல்விஞானம், அவசர பயணம், தியாகம்.

துலாம்; தலை நிலைபாதிப்பு, மனஉளைச்சல், கடன்.

விருச்சிகம்: விதண்டாவாதம், கருத்துமோதல், பிணி.

தனுசு: ஜீவன கஷ்டம், தேவையற்ற விவகாரம், உதாசீனம்.

மகரம்: புதுவாழ்வு, குடும்ப சுகம், தொழில் லாபம்.

கும்பம்: ஆணவப்பேச்சு, மனக்குமுறல், பணமுடை.

மீனம்: காரியபலிதம், இன்ப நினைவு. மகிழ்ச்சி.

**—ஜோஸ்யர்**

---

# ஆட்சேபம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகரசபை சுகாதாரப்பகுதியின் சுகாதார மேற்பார்வையாளர் இருவர் பதில் பொதுச் சுகாதாரப் பரிசோதர்கள் என நியமனம் பெற்றிருப்பதற்கு இலங்கை பொதுச்சுகாதரப் பரிசோதர்கள் சங்க கிளை பலத்த ஆட்சேபம் தெரிவித்துள்ளது.

மக்களின் சுகாதாரம் சம்பந்தப்பட்ட இந்த நியமனம் குறித்து தகுந்த நடவடிக்கை எடுக்குமாறு மேற்படி சங்கம் மாநகர ஆணையாளருக்கு மகஜர் ஒன்றையும் சமர்ப்பித்துள்ளது.

---

## பிரிட்டன் பொதுத் தேர்தல்:

# அபிப்பிராய வாக்கெடுப்பில் எதிர்க்கட்சி முன்னணியில்

(கொழும்பு)

லண்டனில் நடத்தப்பட்ட அபிப்பிராய வாக்கெடுப்பில் கொன்சர்வேடிவ் அரசாங்கத்தைக்காட்டிலும் எதிர்க்கட்சியான தொழிற்கட்சி ஆறு புள்ளிகளைப் பெற்று முன்னணியில் திகழ்கிறது,

பிரிட்டனில் பொதுத்தேர்தல் நடைபெறுவதற்கு இன்னும் ஏழு நாட்களே இருக்கின்றன.

இந்த வாக்கெடுப்பின்படி தொழிற்கட்சி 41 சதவீதமும், கொன்சர்வேட்டிக் கட்சி 35 சதவீதமும் நடுநிலை லிபரல் ஜனநாயகக்கட்சி 19 சதவீதத்தையும் பெற்றுள்ளன.

இந்த மாதம் ஒன்பதாம் திகதி நடைபெறவுள்ள பொதுத் தேர்தலில் பிரிட்டனின் நான்கு கோடியே 40 லட்சம் வாக்காளர்கள் இந்த அடிப்படையில் வாக்களித்தார்களானால் வலதுசாரி கொன்சர்வேடிவ் கட்சியின் 13 வருட கால ஆட்சி முடிவுக்கு வரும்.

---

## நாகபட்டினத்தில்

# 1900 லீற்றர் டீசல் கைப்பற்றப்பட்டது

(சென்னை)

நாகபட்டினம் அருகே கோடிக்கரையில் 55 கொள் கலன்களில் கடத்தப்பட்ட 1900 லீற்றர் டீசலை சுங்க அதிகாரிகள் கடந்த செவ்வாய்க் கிழமை கைப்பற்றினர்.

வான் ஒன்றிலிருந்து இந்த டீசல் கைப்பற்றப்பட்டதாகவும், இது தொடர்பாக 6 பேர் கைது செய்யப்பட்டதாகவும் சுங்கத்துறை உதவி கலெக்டர் தெரிவித்துள்ளார்.

கடந்த 2 மாதங்களில் சுமார் 10 லட்சம் ரூபா மதிப்புள்ள உரிமம் பெறாத வெளிநாட்டு படகு இயந்திரங்கள் இலங்கை தமிழ் அகதிகளிடம் கைப்பற்றப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் கூறினர். (கே)

---

## உதிரிப் பாகங்கள் கொள்ளை

(மானிப்பாய்)

யாழ். மானிப்பாய் வீதியில் உள்ள வியாபார நிலையமொன்றில் ஆயிரக்கணக்கான ரூபா பெறுமதியான சைக்கிள் உதிரிப் பாகங்கள் கடந்த வாரம் கொள்ளையடிக்கப்பட்டுள்ளன.

கடந்த 18-ம் திகதி இரவு சுமார் ஐம்பதினாயிரம் ரூபா பெறும்தியான உதிரிப் பாகங்கள் கொள்ளை யிடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

---

# “பிரிவினைக்கு ஆதரவான ஆசிரியர்மீது நடவடிக்கை எடுக்கப்படும்”

(சென்னை)

பிரிவினை வாதத்திற்குஆதரவாகவோ அல்லது தீவிரவாதிகட்கு ஆதரவாகவோ செயல்படும் ஆசிரியர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என தமிழ்நாடு கல்வி அமைச்சர் சி, அரங்கநாயகம் தெரிவித்துள்ளார்,

நேற்று முன்தினம் சட்டசபையில் கல்விக்கான மானிய ஒதுக்கீடு சம்பந்தமான விவாதத்தில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறினார். (கே)

---

# முதல்வர் ஜெயலலிதாவிற்கு ஆளுநர் ஆலோசனை

(சென்னை)

தமிழக முதல்வர் செல்வி ஜெயலலிதாவை கொலை செய்ய தீவிரவாதிகள் சதி செய்து வருவதால், அவர் மக்களை நேரடியாக சந்திப்பதையும், மனுக்கள் பெறுவதையும் தவிர்க்கவேண்டுமென தமிழக ஆளுநர் பீஷ்மர் நாரயண்சிங், முதல்வரைக் கேட்டுக்கொண்டுள்ளார்.

இத்தகவலை செல்வி ஜெயலலிதா சட்டசபையில் தெரிவித்துள்ளார். இருந்தபோதும் தான் மக்களை சந்திப்பேன் என்றும் அவர் தெரிவித்தார். (கே)

---

## தவக்கால நற்சிந்தனை

உள்ளம் நொறுங்குண்டவர்களுக்கு அருகிலேயே உள்ளார் ஆண்டவர். நீதிமானின் துயரங்கள் பல; ஆனால் அவை அனைத்தினின்றும் ஆண்டவர் அவனைக் கடைத்தேற்றுவார்.

“மனிதன் அப்பத்தினால் மட்டும் அன்று, கடவுளின் வாயினின்று வரும் ஒவ்வொரு சொல்லினாலும் உயிர் வாழ்கிறான்”.

(மத். 4: 46)

**மோ. தார்சிசியஸ்**

---

# கடும்வெப்பத்துக்கு பசு மாடுகள் பலி

(சித்தன்கேணி)

சுழிபுரம், மூளாய் ஆகிய இடங்களில் கடும் வெப்பத்தினால் பசுமாடுகள் இறந்துள்ளன. இதனால் பால் உற்பத்தியும் பாதிப்படைந்துள்ளன.

சுழிபுரம், மூளாய் ஆகிய இடங்களில் கடும்வெப்பத்தை தாங்க முடியாமல் பல பசுமாடுகள் இறந்துள்ளதுடன் பெருந்தொகையான பசுமாடுகளுக்கு நோய் பீடித்திருக்கின்றது. [137]

★ இந்தியாவின் பஞ்சாப்பில்

# வானத்தில் இரு விமானங்கள் மோதின; எட்டுச் சிப்பாய்கள் பலி

[சண்டிகார்]

பஞ்சாப்பில் இரண்டு விமானப்படை விமானங்கள் நடுவானத்தில் மோதி நொருங்கி வீழ்ந்ததில் எட்டு விமானப் படையினர் ஸ்தலத்திலேயே பலியாகினர்.

நேற்று முன்தினம் இரவு லுதியனு மாவட்டத்தில் கன்னு பகுதியில் இவ்விபத்து நிகழ்ந்தது.

இவ்விபத்தில் 8 சிப்பந்திகள் உடல்சிதறி பலியாகினர். இரு விமானத்தின்சிதறல்களும்இரு வெவ்வேறு பகுதிகளில் நொருங்கி வீழ்ந்து கிடந்தன.

விமானங்கள் நேருக்கு நேர் மோதிவீழ்ந்ததையடுத்து அப்பகுதிக்குச் சென்ற தீயணைப்புப் படையினர் மீட்பு வேலைகளை மேற்கொண்டனர்.

இந்த விமானத்தில் உயர் படை அதிகாரிகள் சென்றிருக்கலாமெனவும் இது பற்றி ஏனைய விபரங்கள் எதுவும் வெளியிடப்படவில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது. (கே)

## கூடுதலான அகதிகள் இம்மாதத்தில் திரும்புவர்

(கொழும்பு)

இந்த மாதம் மேலும் கூடுதலான அகதிகளை கப்பல் மூலம் அனுப்பி வைப்பதற்கான போக்குவரத்து ஒழுங்குகளை தமிழக அரசு மேற்கொண்டுள்ளது.

இலங்கை அரசிற்கும் இந்திய அரசிற்கும் இடையில் அண்மையில் நடைபெற்ற பேச்சுவார்த்தைகளை அடுத்தே இந்த ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

புத்தாண்டிற்கு முன்பாக மேலும் 1500 அகதிகள் தாயகம் திரும்பவுள்ளனர்.

இவர்கள் இருதொகுதியாக திருப்பி அனுப்பப்படுவர்.

முதலாவது தொகுதியினர் தலைமன்னாரிலும், இரண்டாம் தொகுதியினர் திருமலையிலும் வந்து இறங்குவர். (ரி)

## முத்தமிழ் விழா நிதிக்காக தென்மராட்சியில் கலை நிகழ்ச்சி

(யாழ்ப்பாணம்)

முத்தமிழ் விழாவிற்கு நிதி சேகரிக்கும் பொருட்டு விடுதலைப்புலிகள் கலை, பண்பாட்டுக்கழகம் கலை நிகழ்ச்சிகளைத் தொடர்ந்து நடாத்தவுள்ளது. தென்மராட்சிப் பிரிவில் இடம்பெறவிருக்கும் கலை நிகழ்ச்சிகள் இன்றும், நாளையும், நாளை மறுதினமும் இடம் பெறவுள்ளன.

இதன்படி முதலாவது நிகழ்ச்சி இன்று வெள்ளிக்கிழமை இரவு 7 மணியளவில் கைதடி நவீல்ட் பாடசாலையிலும் நாளை சனிக்கிழமை இரவு 7 மணிக்கு சாவகச்சேரி மகளிர் கல்லூரி அரங்கிலும், ஞாயிற்றுக்கிழமை இரவு 7-00 மணியளவில் கொடிகாமம் திருநாவுக்கரசு மகாவித்தியாலயத்திலும் இடம்பெறவுள்ளன.

இக்கலை நிகழ்ச்சியில் சாந்தன் குழுவினர் வழங்கும் 'போர்க்கால ராகங்கள்' இசை நிகழ்ச்சியும், விடுதலைப் புலிகள் கலை பண்பாட்டுக் கழகத்தினால் தயாரிக்கப்பட்ட 'சந்தனக்காடு' நாடகமும் இடம்பெறவிருக்கின்றது.

## ஆணைக்குழு நியமிக்குமாறு அரசுக்கு வற்புறுத்து

(கொழும்பு)

1989–1990 காலங்களில் காணாமற்போனவர்களைக் கண்டுபிடிப்பது சம்பந்தமாக சுயேட்சையான ஆணைக்குழுவை உடனடியாக நியமிக்குமாறு அரசிடம் நவசமசமாஜக் கட்சித் தலைவர் வாசுதேவநாணயக்காரா கேட்டுள்ளார்.

திஸ்ஸமகாராம ராஜமகாவிகாரையில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற பாதயாத்திரை கூட்டத்தில் வாசுதேவ நாணயக்கார உரையாற்றுகையில் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் அங்குமேலும் உரையாற்றுகையில்: தற்போது நியமிக்கப்பட்ட ஆணைக்குழுவுக்கு 1991 ஜனவரி, பெப்ரவரி மாதங்களில் காணாமற்போனவர்களைப் பற்றி காரணம் கண்டுபிடிப்பது சம்பந்தமான அதிகாரம் மட்டுமேஉண்டு என்றார். [மா]

## முன்னாள் சபாநாயகர் காலமானார்

(கொழும்பு)

முன்னாள் சபாநாயகரும் முன்னாள் அமைச்சருமான ஹியூ பெர்ணண்டோ காலமானார்.

1956ம் ஆண்டு நாத்தாண்டியா நாடாளுமன்ற உறுப்பினராக தெரிவுசெய்யப்பட்ட இவர் 1960, 1965ம் ஆண்டுகளில் நடைபெற்ற பொது தேர்தல்களில் வென்னப்புவ நாடாளுமன்ற உறுப்பினராக தெரிவுசெய்யப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது. (மா)

## 8000 பட்டதாரிகளுக்கு விரைவில் வேலைவாய்ப்பு

(கொழும்பு)

எண்ணாயிரம் பட்டதாரிகள் வெகுவிரைவில் வேலைவாய்ப்பினை பெறுவார்கள். அரசாங்க துறையிலும் தனியார் துறையிலும இந்த வேலைவாய்ப்புகள் வழங்கவிருப்பதாக அமைச்சரவைப் பேச்சாளர் ரணில் விக்கிரமசிங்க நேற்று கொழும்பில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் தெரிவித்தார்.

கொள்கை திட்டமிடல் அமைச்சு வேலைவாய்ப்பற்ற பட்டதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் ஏற்கனவே கோரியுள்ளதாகவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார். (மா)

## பாதயாத்திரையில் நிருபர்மீது தாக்குதல்

[கொழும்பு]

எதிர்க்கட்சிகள் நடாத்திய பாதயாத்திரையைபடம்பிடித்துக்கொண்டிருந்த ஏ. எவ். பி. புகைப்படப்பிடிப்பாளர் திரு. சேனவிதானகம தாக்கப்பட்டது குறித்து வெளிநாட்டு பத்திரிகையாளர் சங்கத்தலைவர் திரு. லூஸியான் ராஜகருணநாயக்க சுதந்திரக்கட்சியின் பொதுச்செயலாளருக்கு கண்டனக்கடிதம் அனுப்பியுள்ளார்.

பாதயாத்திரைக்கு பாதகமான படத்தை எடுத்தாரென இவரை தாக்கியோர் கூறியுள்ளனர். உதாரணமாக சாராயப் போத்தல்கள் வைத்திருந்ததை இவர் படம் எடுத்தாராம்.

இவ்வாறான தாக்குதல் பத்திரிகையாளரின் சுதந்திரத்தைப் பாதிக்கும் ஒருசெயலாகும் எனவும் கண்டனம் தெரிவிக்கப்பட்டுள்ளது. (சி)

### க. பொ. த. விஷேட

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பகுதி-IIல் 7-வது வினாவின் (ஆ) பகுதியில் கொடுக்கப்பட்ட தேசியவருமானக் கணக்கில் வழங்கப்பட்ட தகவல்களில் ஒன்றான ''வெளிநாட்டு கொடைகளும் கைமாற்றல் சம்பாத்தியமும்-10,400 என தவறாக அச்சிடப்பட்டுள்ளது.

ஆனால் அது வெளிநாட்டுக் கொடைகளும் கைமாற்றல் சம்பாத்தியமும் (தேறியது) + 10,400 என இருக்கவேண்டும், என்று யாழ். நகரின் முன்னணி பொருளியல் ஆசிரியர் திரு. எஸ். வரதராஜன் தெரிவித்தார். (வி)

## அன்னைபூபதி அறிவுத்தேர்வு விடைத்தாள் திருத்தும்பணி

(யாழ்ப்பாணம்)

அன்னை பூபதி நினைவுபொது அறிவுத் தேர்வு விடைத்தாள் திருத்தும் பணி நாளை சனி காலை 8 மணிக்கு பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி, இராமநாதன் மகளிர் கல்லூரி, மீசாலை வீரசிங்கம் ம. வி. கொக்குவில் இந்துக் கல்லூரி ஆகிய மைய நிலையங்களில் ஆரம்பமாகின்றது.

விடைத்தாள் திருத்தும் பணிக்கு விருப்பம் தெரிவித்த சகல ஆசிரியர்களும் தாம் பணியாற்றும் மதிப்பீட்டு நிலையங்களுக்கு நாளை காலை 8மணிக்கு சமுகமளிக்குமாறு விடுதலைப்புலிகள் மாணவர் இயக்கம் கேட்டுக்கொள்கிறது,

அல்வாய் சின்னத்தம்பி ம. வி. பருத்தித்துறை விக்கினேஸ்வராக் கலலூரி ஆகிய மதிப்பீட்டு மைய நிலையங்களில் இம்மாதம் 6-ம் திகதி திங்கட்கிழமை காலை 8 மணிக்கு விடைத்தாள் மதிப்பீட்டுப் பணி ஆரம்பமாகும்.

மன்னார், முல்லைத்தீவு, வவுனியா, மணலாறு, கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களின் விடைத்தாள்கள் திருத்தும் பணி கிளிநொச்சி இந்து ம.வி இல்இம்மாதம்6-ம் திகதி 8 மணிக்கு ஆரம்பமாகும்.

### இலங்கையில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சைக் கைப்பற் ஏதுவாகலாமென அரசியல் அவதானிகள் கருதுவதாக லங்கா கார்டியன் ஏட்டில் வெளிவந்த கட்டுரையொன்றில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

இந்திய பாதுகாப்புத்துறை தொடர்பான பிரபல விமர்சகர் எஸ். எஸ். மிஸ்ரா லங்கா கார்டியனில் எழுதிய கட்டுரையில் இதனைத் தெரிவித்துள்ளார். அக் கட்டுரையில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:

இராணுவத்திற்குக் காலாகாலத்திற்குத் தேவைப்படும் இராணுவ உபகரணங்கள், வாகனத் தளபாடங்கள் கொள்வனவு செய்வதற்கு ஜனாதிபதி பிரேமதாசா தாராள சிந்தையுடன் உதவி வருகிறார்.

புலிகளுக்கெதிராக ராணுவம் எடுக்கும் எந்த நடவடிக்கைக்கும் அவர் இராணுவத்திற்கும் ஆமா போட்டுக்கொள்கிறார்.

இந்த நிலைமையைதொடரவிட்டால், ராணுவம் தன்னிச்சைபோல் நடந்து பழக்கப்பட்டு, ஜனநாயகத்திற்கு ஆப்புவைத்து அரசை கைப்பற்ற ஏதுவாகும் என அரசியல் அவதானிகள் கருதுகின்றனர்.

1983இல் இருந்து இனப் பிரச்னை தீர்க்கப்படாமல் வளர்ந்துகொண்டே போகிறது. ராணுவச்செலவும் அபரிமிதமாக வளர்கிறது. ஆட்சிக்கு வந்த ஒவ்வொரு அரசும் இனப்பிரச்னைக்கு ராணுவ தீர்வை நாடியதால் வந்த வினையே இது.

இதனால் நாட்டின் பொருளாதார முன்னேற்றத்தில் வீழ்ச்சியை காணமுடிந்தது.

இந்தவித அபரிமிதமான ராணுவச்செலவினால் நாட்டில் சமூகபொருளாதார பிரச்னையும் தோன்றவே செய்துள்ளது.

ராணுவ விஸ்தரிப்பு ஏற்படுத்தப்பட்டபோதிலும் இராணுவத்திடையே ஒழுக்கக் கட்டுப்பாடும் சுட்டுக்கோப்பும் சீரற்று காணப்பட்டது.

படையில் பெருமளவினர் சிங்களவர் ஆனதினால் அவர்கள் மீது தமிழர்களிடமிருந்து வெறுப்புணர்ச்சியே காணப்படுகிறது. இது அண்மையில் சர்வதேச மனித உரிமை பேணும் அமைப்பினாலும் சிறிலங்கா ராணுவத்தில் ஒழுக்கக் குறைவுபற்றி சுட்டிக்காட்டப்பட்டதிலிருந்து தெளிவாகிறது.

தற்போது இலங்கையில் ஒரு புதுவிதமான நாடகக் காட்சி நிலவுகிறது. தமிழ்க் கட்சிகளால் இனப்பிரச்னைக்கு இணக்கம் காணமுடியாத ஒரு நிலையும், இதேவேளைஇலங்கை அரசோ நிலைமையை சுமுகமாக தீர்க்காமல் இழுபட்டுக் கொண்டுபோகும் இனப்பிரச்னைக்கு ராணுவ நடவடிக்கையில் நாட்டம்கொண்டு செல்வதையும் காணமுடிகிறது. [கே]

### 1,500 கோடி

(1ம் பக்கத் தொடர்ச்சி

ஆறு ஜெற் ரக யுத்த விமானங்களும, 5 சீன பீரங்கிப் படகுகளும் கொளவனவு செய்துள்ளது. (கே-சி)

### கிழக்கில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கொண்டிருந்த இராணுவத்தினர்மீது சிந்தாண்டியில் வைத்து புலிகள் தாக்கினார்கள், இத்தாக்குதலில் பல படையினர் தரப்பில் பலத்த சேதம் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. [ரி]

### படையினருக்கு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

களில் தொடர்ந்து நடைபெறும் யுத்தத்தில விடுதலைப் புலிகளின் தாக்குதல்களினால் பல படையினர் தினமும் காயமடைந்து வருகின்றனர். இவ்வாறு காயமடைபவர்களுக்கு தனித்துவமான விசேட வசதிகள் அமைத்துக் கொடுத்து சிகிச்சையளிக்க வேண்டியுள்ளது. இதற்காக பல லட்சம் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. (ரி)

## வவுனியாவில் ஊரடங்கு

(கொழும்பு)

வவுனியா மாவட்டத்தில் படையினரின் கட்டுப்பாட்டில் இல்லாத பகுதிகளில் இன்று அதிகாலை ஒரு மணி முதல் 5-ந் திகதி காலை 6 மணி வரை ஊரடங்கு உத்தரவு அமுல் செய்யப்படுவதாக கூட்டுப்படைத் தலைமையகம் அறிவித்துள்ளது. (சி)

### கைக்குண்டு வெடித்து!

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தது.

இக்குண்டு வெடிப்பினால் ஒரு சப் இன்ஸ்பெக்டர் உட்பட இருபொலிஸார் ஸ்தலத்திலே உயிரிழந்தனர். 12 பேர் காயமடைந்தனர். (ரி)

## இன்று

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் நாவலர் தமிழ் வித்தியாலயத்தில் நிறுவுனர் நினைவும், நாவலர் சிலை திறப்பு விழாவும் இன்று 3-ம் திகதி வெள்ளிக்கிழமை மு. ப. 10 மணியளவில் நடைபெறவுள்ளது. (சு)

0 0

(யாழ்ப்பாணம்)

மானிப்பாய் சோதிவேம்படி காளி அம்மன் தேவஸ்தானத்தில் வசந்த நவராத்திரி விழா இன்று 3ம் திகதி ஆரம்பமாகி 11ம திகதி வரை இடம்பெறவுள்ளது. (சு)

## கட்சியிலிருந்து நீக்கம்

(சென்னை)

இந்திரா காங்கிரஸ் கட்சியின் தமிழ்நாடு உறுப்பினர் க. சுப்பு கட்சியிலிந்து நீக்கம் செய்யப்பட்டுள்ளார்.

அ. அ. தி. மு.க. -இ. காங்கிரஸ் உறவிற்கு குந்தகமாக செயற்பட்டுவந்த காரணத்தினாலேயே இவர் இ. காங்கிரஸிலிருந்து நீக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (ரி)

### 1 லட்சம் தேங்காய்

[1-ம் பக்கத் தொடர்ச்சி)

அரசுக்கு எதிராக எதிர்க்கட்சிகளால் நடத்தப்பட்டு வரும் பாதயாத்திரைப் பேரணியின் இறுதியிலே இவ்வாறு வழிபாடு நடத்தப்பட்டது.

கொழும்பிலிருந்து ஆரம்பிக்கப்பட்ட இந்த பாதயாத்திரை நேற்று பதினெட்டாம் நாள் கதிர்காமத்தை சென்றடைந்தது,

குழந்தைகள், பெண்கள், ஆண்கள் உட்பட ஐம்பதினாயிரத்திற்கும் மேற்பட்டோர் இந்தப் பேரணியில் கலந்து கொண்டனர்.

இப்பேரணியில் கலந்து கொண்டவர்கள் ஆற்றில் நீராடி வெள்ளையுடை தரித்து தற்போதைய அரசு பதவி இழக்கவேண்டுமெனக்கோரி பிரார்த்தனை நடத்தினார்கள்.

கதிர்காமத்திலுள்ள இந்து, பௌத்த ஆலயங்களில் இந்தப் பிரார்த்தனை நடத்தப்பட்டன. (ரி)

இப்பத்திரிகை ''ஈழநாடு'' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1992-ம் ஆண்டு ஏப்பிரல் மாதம் 03-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News Paper at th General Post office Sri Lanka under Licence Number B/10336/8I.